முருகப்பெருமான் துணை

**மகான் கவுபாலச்சித்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**13.01.2024**, சனிக்கிழமை

1. அவதார ஞான வள்ளலே
அவதார ஆறுமுக அரங்கனே
அவதார ஞான தேசிகனே
அவதார நன்னாளாம் சோபகிருது
2. சோபகிருது சிலை திங்களில்
சுருதிபடி இருபாணெண்திகதி காரிவாரம்
(சோபகிருது வருடம் மார்கழி மாதம் 28 ம் நாள், 13.01.2024, சனிக்கிழமை)
அபயமென துல்லிய ஆசிதனை
அரங்கனுக்கு கவுபாலச்சித்தரும் உரைப்பேன்
3. உரைப்பேன் உலகோர் ஞானம் பெற
உயர்வான அரங்கன் அவதார
மறைபோற்றும் இதுநாள் தன்னில்
மனதார சரணாகதி கொண்டு
4. கொண்டுமே பிரணவக்குடில் நாடி
குருவே என அரங்கனை பணிந்து
தொண்டனென அடையாளம்பெற
தேடியே பரிசுகள் வழங்கி
5. வழங்கிட வேணும் தருமம் பெற
வருவாயில் பத்தில் ஒருபங்கேனும்
களங்கமற அரங்கனிடம் தந்து
கருணைபட அருளாசி தா என
6. என வேண்டி தீட்சை ஏற்று
எல்லாமே உன் அடியென
ஞானம் வேண்டி பணிந்துவிட
நம்பிக்கையோடு இதுநாள் தன்னில்

7. தன்னிலே அனுகி வணங்கிட
தவசிக்குக் கிட்டிய தனிப்பெரும்
அண்ணல் எனும் கந்தவேலன்
ஆற்றலே வரமாகக் கிட்டி

8. கிட்டியே வரும் மக்களுக்கு
கேட்ட வரமெலாம் கிடைக்கும்
கட்டங்கள் யாவும் விலகும்
கலியினில் ஞான பலம் கூடி

9. கூடியே யாவரும் ஞானியாகும்
கூறிடுவேன் மகத்துவமுள மாற்றம்
நாடியே அரங்கன் ஆசிபட
ஞானிகளாகும் வரம் அடைவர்

10. அடையவே உலகமாற்றம் தரும்
அரங்கன் அவதார தினமும்
சோடை போக்கும் தடைநீக்கும்
சுபிட்சமும் இயற்கை பலமும்

11. பலமான ஞானிகள் ஆசியை
பழுதின்றி மக்களுக்குத் தந்தருளும்
சலனமிலா மாயை அல்லலிலா
சகல பாதுகாப்பும் தந்தருளும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–

துறையூர் ஓங்காரக்குடிலாசானுக்கு **13.01.2024 சோபகிருது வருடம் மார்கழி 28ம் நாள்** சனிக்கிழமை முதல் **89**ம் வயது ஆரம்பம் இன்றைய தினத்திலே அகத்தியர் சன்மார்க்க சங்க தொண்டர்கள் அனைவரும் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்கமகா தேசிகர் நீடு வாழ வேண்டும் என வாழ்த்துமாறு வேண்டிக்கொள்கிறோம்.